செய்தி வெளியீடு எண்: 251 நாள் : 01.06.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (1.6.2016) தலைமைச் செயலகத்தில், 2016–2017ஆம் கல்வியாண்டில் 1 முதல் 12–ஆம் வகுப்பு வரை படிக்கும் 90 லட்சம் மாணவ, மாணவியருக்கு பாடப் புத்தகங்களும், 1 முதல் 10–ஆம் வகுப்பு வரை படிக்கும் 77 லட்சம் மாணவ, மாணவியருக்கு நோட்டுப் புத்தகங்களும், 1 முதல் 8–ஆம் வகுப்பு வரை படிக்கும் 47 லட்சம் மாணவ, மாணவியருக்கு இணைச் சீருடைகளும் வழங்கும் திட்டங்களை துவக்கி வைக்கும் அடையாளமாக, 5 மாணவ, மாணவியருக்கு பாடப் புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும், இணைச் சீருடைகளையும் வழங்கி வாழ்த்தினார்கள்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும், அனைத்து மாணவ, மாணவியருக்கும் தரமான கல்வி வழங்கிட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில், இடைநிற்றல் இன்றி கல்வி கற்கும் வகையில் கட்டணமில்லா கல்வி, சத்தான உணவு, விலையில்லா சீருடைகள், மடிக்கணினிகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள், புத்தகப் பை, காலணிகள், பேருந்து பயண அட்டைகள், மிதி வண்டிகள் வழங்குதல், பள்ளிகளின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு கடந்த ஐந்து ஆண்டுகளாக சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

தரமான கல்வி வழங்க, பள்ளிகள் அவசியம் என்பதால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு, கடந்த 5 ஆண்டுகளில் 221 புதிய தொடக்கப் பள்ளிகளை தொடங்கி வைத்தும், 112 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாகவும், 810 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும் மாணவர்கள் அவர்களின் குடியிருப்பிற்கு அருகிலேயே கல்வி பயில வழி வகை செய்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு, கடந்த ஐந்து ஆண்டுகளில் தேவைக்கேற்ப பள்ளி வசதிகளை அமைத்துக் கொடுத்ததோடு, பள்ளிகளுக்கு தேவைப்படும் உள்கட்டமைப்பு வசதிகளான புதிய பள்ளிக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர் வசதிகள், மாணவ, மாணவிகளுக்கென தனித்தனி

கழிப்பறைகள், சுற்றுசுவர், மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகளுக்கென சாய்வு தளங்கள் போன்றவற்றை 4,165 கோடியே 95 லட்சம் ரூபாய் செலவில் அமைத்துக் கொடுத்துள்ளது. மேலும், கடந்த 5 ஆண்டுகளில் 76,338 ஆசிரியர் பணியிடங்களை ஒப்பளித்தும் 72,843 ஆசிரியர்களை பணியமர்த்தியும் உள்ளது.

2016–2017ஆம் கல்வியாண்டில், மாணவர்கள் மன நிறைவுடன் பள்ளிக்கு செல்லவேண்டும் என்ற நோக்குடன் பள்ளி தொடங்கும் முதல் நாளிலேயே 1 முதல் 12–ஆம் வகுப்பு வரை படிக்கும் 90 லட்சம் மாணவ, மாணவியருக்கு பாடப் புத்தகங்கள், 1 முதல் 10–ஆம் வகுப்பு வரை படிக்கும் 77 லட்சம் மாணவ, மாணவியருக்கு நோட்டுப் புத்தகங்கள், 1 முதல் 8–ஆம் வகுப்பு வரை படிக்கும் 47 லட்சம் மாணவ, மாணவியருக்கு இணைச் சீருடை ஆகியவற்றை வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

அதன்படி, 1 முதல் 12–ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியருக்கு பாடப் புத்தகங்களும், 1 முதல் 10–ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியருக்கு நோட்டுப் புத்தகங்களும், 1 முதல் 8–ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியருக்கு இணைச் சீருடைகளும் வழங்கும் திட்டங்களை துவக்கி வைக்கும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் 5 மாணவ, மாணவியருக்கு பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் சீருடைகளை வழங்கி வாழ்த்தினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் திரு. பி. பெஞ்சமின், தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி த. சபிதா, இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை துணைச் செயலாளர் திரு.ஏ.ஆர். ராஹுல் நாத், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 1.6.2016**